Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 18/2021** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW35** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர்.வினோதன் |
| Father/Husband Name | : | ஜெயபால்சிங் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | மருத்துவர் |
| Religion | : | |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2026

( 1, 9 எதிரிகள் இறப்பு, 2, 3, 5 முதல் 8, 12, 15, 16, 19 எதிரிகள் ஆஜரில்லை, 2, 3, 5 முதல் 8, 12, 15, 16, 19 எதிரிகள் தரப்பில் BNSS –355 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 4, 6, 10, 11, 13, 14, 17, 18 எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அறுவைசிகிச்சை துறையில் உதவிபேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 21.05.2018 ம் தேதி இராமநாதபுரம் தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது பூமிநாதன் வயது 32 ஆண் என்பவரது உடல்

கேணிக்கரை காவலர் சண்முகநாதன் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டு பிரேத பரிசோதனை செய்தேன்.

**உடற்கூராய்வு விவரங்கள்:**

Postmortem எண்.140/2018, 21.05.2018 காலை 11.40 மணிக்கு பிரேத பரிசோதனை துவங்கினேன், உடலின் கை, கால்கள் முழுவதும் விரைத்த தன்மையில் இருந்தது.

**வெளிப்புறத்தோற்றம்**:

கண்கள் திறந்த நிலையிலும், வாய் மூடியநிலையிலும் இருந்தது, காது, மூக்கு பகுதிகளில் எந்த இரத்தமும் காணப்படவில்லை.

**வெளிப்புறக்கூராய்வில் நான்கு காயங்கள் காணப்பட்டன.**

1. ஆழமான வெட்டுக்காயம் கழுத்தின் முன்பகுதியில் இருந்து ஆரம்பித்து வலதுபக்க கழுத்து, பின்புற கழுத்து, பின்புற தண்டுவட எலும்பு வரையில் இருந்தது. வலதுபக்க கழுத்தில் மூளைக்கு செல்லும் முக்கியமான ரத்தக்குழாய்கள் இரண்டும் முழுவதுமாக வெட்டப்பட்டநிலையில் இருந்தது, மூச்சுக்குழாய் முழுவதுமாக வெட்டப்பட்டநிலையில் இருந்தது.

2. 10 X 4 X 3 cm அளவில் உள்ள வெட்டுக்காயம் தலையின் பின்பகுதியிலிருந்து வலதுபக்க காதுவரை இருந்தது, காயம் எலும்புவரை சென்றிருந்தது.

3. 2 X 1 X 0.5 cm அளவிளான வெட்டுக்காயம் வலது உள்ளங்கையில் காணப்பட்டது.

4. 8 X 0.5 cm அளவிளான இரத்த உறைவு வலதுகையில் காணப்பட்டது. எல்லா வெட்டுக்காயங்களிலும் இரத்தம் உறைந்தநிலையில் காணப்பட்டது.

உள்கூராய்வில் நெஞ்சுப்பகுதியை திறந்தபோது இதயம், நுரையீரல் ஆகியவற்றில் எந்த காயமும் காணப்படவில்லை. வயிற்றுப்பகுதியை திறந்தபோது இரைப்பையில் பாதி ஜீரணித்த உணவு இருந்தது, சிறுகுடல், பெருகுடலில் நீரும், காற்றும் நிறைந்து இருந்தது. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் ஆகியவற்றில் எந்த காயங்களும் காணப்படவில்லை. தலையின் உட்பகுதியில் எலும்பு முறிவோ, இரத்தகசிவோ, மூளையில் காயங்களோ இல்லை. உள்ளுறுப்புகள் டாக்சிகாலஜி பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அதன் முடிவை பெற்று இறந்தநபர் கழுத்தில் தலை துண்டாக்கப்படக்கூடிய கூர்மையான கனமான ஆயுதத்தில் தாக்குதலால் உடற்கூராய்வு நேரத்திற்கு முன்பாக 10.00 முதல் 14.00 மணி நேரங்களுக்கு முன்பாக

இறந்திருக்ககூடும் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை **அ.சா.ஆ.54**.

கடந்த 21.05.2018ம் தேதி பிற்பகல் 12.40 மணிக்கு விஜய் வயது 26 ஆண் என்பவரது உடல் கேணிக்கரை காவலர் HC 708 சத்தியேந்திரன் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டு உடற்கூராய்வு செய்தேன். அவரது உடலில் கை, கால்கள் முழுவதும் விரைத்த தன்மையில் இருந்தது. கண்கள், வாய் மூடியநிலையில் இருந்தது. காது, மூக்கு துவாரங்களில் இரத்தம் எதுவும் காணப்பட்வில்லை. அவரது உடலில் மொத்தம் 7 காயங்கள் காணப்பட்டன.

1. தலையை முழுவதும் துண்டாக்கக்கூடிய வெட்டுக்காயம் இடதுபக்க கழுத்தில் 10 செமீ தோல் மட்டுமே பிண்டத்தில் ஒட்டியிருக்க காணப்பட்டது. கழுத்தில் உள்ள மூச்சுக்குழாய், தண்டுவடம் மற்றும் தண்டுவடஎலும்பு, மூளைக்கு செல்லக்கூடிய முக்கியமான இரத்தக்குழாய்கள் மற்றும் தசைப்பகுதிகள் அனைத்தும் துண்டாக்கப்பட்டநிலையில் இருந்தது.

2. மேலே கூறிய காயத்திற்கு மேல்பகுதியில் வலதுபக்க காது எலும்புக்கு கீழ்பகுதியிலிருந்து ஆரம்பித்து இடதுபக்க காதின் கீழ்பக்க தசைவரை வெட்டுக்காயம் இருந்தது. கழுத்தில் உள்ள இரத்தக்குழாய்கள், மூச்சுக்குழாய், தண்டுவடம் துண்டாக்கப்பட்டநிலையில் இருந்தது.

3. 6 X 0.5 X 0.5 cm அளவிளான வெட்டுக்காயம் வலதுதலைப்பக்கத்தில் காணப்பட்டது.

4. தலையின் முன்பகுதியில் 10 X 2 X 1 cm அளவிளான 2 வெட்டுக்காயங்கள் அடுத்தடுத்து தலையின் முன்மண்டையோட்டு எலும்பு முறிவு ஏற்படுத்தும்வண்ணம் இருந்தது.

5. 4X 2 X 1 cm அளவிளான கூர்மையான வெட்டுக்காயம் வலதுகையின் முன்பகுதியில் இருந்தது.

6. 3 X 1 X 0.5 cm அளவிளான வெட்டுக்காயம் இடது ஆள்காட்டி விரலில் இருந்தது.

7. 10 X 3 X 2 cm அளவிளான கூர்மையான வெட்டுக்காயம் வலதுபக்க இடுப்பில் தசை மற்றும் தோல் ஆகியவற்றை வெட்டியநிலையில் காணப்பட்டது.

உடல் உட்கூராய்வில் நெஞ்சுப்பகுதியை திறந்தபோது இதயம், நுரையீரல்கள் எந்த காயமும் காணப்படவில்லை.

வயிற்றுப்பகுதியை திறந்தபோது இரைப்பையில் உண்ட உணவு நிறைந்திருந்தது. சிறுகுடல், பெருகுடலில் நீரும், காற்றும் நிறைந்து இருந்தது. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் ஆகியவற்றில் எந்த காயங்களும் காணப்படவில்லை. தலைப்பகுதியை திறந்தபோது தலையின் முன்பகுதியில் உள்ள மண்டையோட்டு எலும்பு இரண்டு இடங்களில் முறிவு ஏற்பட்டு விலகியநிலையில் இருந்தது. தலையின் உட்பகுதியில் உள்ள மேலடுக்கின் கீழ் இரத்தம் உறைந்தநிலையில் காணப்பட்டது. இறந்த நபரின் உள்ளுறுப்புகளை டாக்சிகாலஜி பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அதன் முடிவை பெற்று இறந்தநபர் கழுத்தில் தலை துண்டாக்கப்படக்கூடிய கூர்மையான கனமான ஆயுதத்தின் தாக்குதலால் உடற்கூராய்வு நேரத்திற்கு முன்பாக 10.00 முதல் 14.00 மணி நேரங்களுக்கு முன்பாக இறந்திருக்ககூடும் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை **அ.சா.ஆ.55**. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

Postmortem செய்வதற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தபோது ஆய்வாளர் உடன் இருந்தாரா என்றால் ஞாபகமில்லை. இவ்வழக்கின் சரித்திரம் எனக்கு காவல் துறையினரால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் தடயவியல்துறையில் நிபுணத்துவம் பெற்ற நிபுணரில்லை என்றால் சரிதான். நான் குறிப்பிட்ட நாளில் போலிசாரால் இரண்டு உடல்கள் பிரேத பரிசோதனைக்கு கொண்டுவரப்பட்டது என்றால் சரிதான். நான் உடற்கூராய்வு செய்யும்போது தடயவியல்துறை நிபுணரின் உதவியுடன்தான் செய்திருக்க வேண்டும் என்றால், அவ்வாறு Tamilnadu Medical Code விதி 621 தெரிவிக்கிறது என்றால் ஞாபகமில்லை. இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் தடயவியல் துறை சார்ந்த நிபுணர் இல்லை. பிரேத பரிசோதனையை நான் காவல் துறையினர் வேண்டுகோளுக்கிணங்க செய்தேன் என்றால் சரிதான். இரண்டு உடல்களை ஒரே நேரத்தில் பிரேத கூராய்வு

செய்யமுடியாது என்றால் சரிதான். பிரேத கூராய்வு அறிக்கையில் ஆரம்பிக்கப்பட்ட நேரமும், முடிக்கப்பட்ட நேரமும் குறிக்கப்படவேண்டும் என்றால் சரிதான், ஆரம்பிக்கப்பட்ட நேரத்தை குறிப்பிட்டுள்ளேன், முடித்த நேரத்தை குறிப்பிடவில்லை. அவ்வாறு பிரேத பரிசோதனை முடிந்த நேரம் குறிப்பிடவில்லை என்பதால் இரண்டு பிரேதங்களின் பிரேத பரிசோதனையும் எந்த நேரத்தில் முடிக்கப்பட்டது என்று என்னால் கூறமுடியாது என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கை தொன்றுதொட்டு வழங்கக்கூடிய படிவத்தில் வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். தேசிய மனிதஉரிமை ஆணையத்திலிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை இந்த படிவத்தில்தான் வழங்கப்படவேண்டும் என்று அறிவித்துள்ளது என்றால் இந்த வழக்கில் பிரேதபரிசோதனை செய்த நாளில் அந்த ஆணை வந்ததாக தெரியவில்லை. அந்த ஆணை எப்போது வந்தது என்று எனக்கு தெரியாது. Tamilnadu Medical Code விதி 621ன் படி பிரேதபரிசோதனை முடிந்த நேரத்தை கண்டிப்பாக குறிப்பிட்டிருக்க வேண்டும் என தெரிவிக்கிறது என்றால் தெரியாது. பிரேத பரிசோதனை செய்யும் நேரத்தில் குறிப்பு எடுத்துக்கொண்டு பிறகுதான் பிரேத பரிசோதனை அறிக்கை தயார் செய்வோம் என்றால் சரிதான். பிரேத பரிசோதனை செய்தது சம்மந்தமாக என்னை எங்கு, எப்போது பிரேத பரிசோதனை செய்த பின்னர் எத்தனை நாட்களுக்கு பின்னர் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்று சொல்லமுடியுமா என்றால் முடியாது, ஒரு மாதத்திற்குள் விசாரித்திருக்கலாம். பிரேத பரிசோதனை அறிக்கை பிரேத பரிசோதனை நடத்திய அன்றே தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். பிரேத பரிசோதனை அறிக்கையை ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போதுதான் கொடுத்தேன் என்றால் சரிதான். Tamilnadu Medical Code விதி 621ல் பிரேத பரிசோதனை முடிந்த உடனே சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று சொல்கிறது என்றால் தெரியாது. பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் பிரேத பரிசோதனை குறித்த இறுதி அறிக்கை இரண்டையும், வெவ்வேறு காலங்களில் வழங்கப்படும் என்றால் சரிதான். இரண்டு பிரேதங்கள் குறித்த பிரேத பரிசோதனை இறுதி அறிக்கை 01.08.2018 அன்று வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கை 21.05.2018 அன்று வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது ஆயுதங்களை காண்பித்து அந்த ஆயுதங்களால்

காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டா என்று விசாரிக்கவில்லை என்றால் சரிதான். உடல் விரைப்பு தன்மையை வைத்துத்தான் 10 முதல் 14 மணிநேரத்திற்கு முன்பு இறந்திருக்க கூடும் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். முதல் 12 மணிநேரத்தில் உடல் விரைப்புத்தன்மை ஆரம்பித்து உடலில் இருக்கும் என்றால் சரிதான். அடுத்த 12 மணிநேரம் வரை விரைப்புத்தன்மை நீடித்திருக்கும் என்றால் சரிதான், காலசூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடலாம். உடல் முழுவதும் விரைப்புத்தன்மை இருந்ததால்தான் 10 – 14 மணிநேரம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 24 மணிநேரம் வரை உடல் முழுவதும் விரைப்புத்தன்மை இருக்க வாய்ப்புண்டு என்றால் சரிதான். 24 மணிநேரம் வரை உடல் விரைப்புத்தன்மை இருக்க வாய்ப்புள்ளது என்பதால், 24 மணிநேரத்திற்கு முன்பாக இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு என்றால் விரைப்பு தன்மையை மட்டும் வைத்து கூறலாம்.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.